सत्यमेव जयते

**இந்திய துணைத்தூதரகம்**

**யாழ்ப்பாணம்**

…

**ஊடக அறிக்கை**

## இந்திய ரயில்வே கட்டுமான கம்பனியால் இந்தியாவின் சலுகைக் கடன்திட்டத்தின் கீழ் மீள்கட்டமைப்பு செய்யப்பட்ட கிளிநொச்சி-பளை புகையிரதத் தட மற்றும் சமிக்ஞை அமைப்பின் ஆரம்பம்.

கிளிநொச்சிக்கும் பளைக்குமிடையில் மீள்கட்டமைக்கப்பட்ட புகையிரதத் தடத்தினை திறந்து வைக்குமுகமாக 04 மார்ச் 2014 அன்று ஒரு வைபவம் நடத்தப்பட்டது. இவ்வைபவத்தில் இலங்கை அரசின் போக்குவரத்து அமைச்சர் கௌரவ குமார வெல்கம அவர்களும், பாரம்பரியக் கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களும், இந்திய உயர்ஸ்தானிகர் மேன்மை தங்கிய வை.கே.சின்ஹா அவர்களும், யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதுவர் திரு. வி.மகாலிங்கம் அவர்களும், வடமாகாண ஆளுனர் கௌரவ ஓய்வுநிலை மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திசிறி அவர்களும், போக்குவரத்து அமைச்சின் பிரதி அமைச்சர் கௌரவ ரோஹண குமார திஸாநாயக்க பா.உ. அவர்களும் இலங்கை புகையிரதத்திணைக்களம் மற்றும் போக்குவரத்து அமைச்சின் முதுநிலை அதிகாரிகளும், இந்திய ரயில்வே கட்டுமான கம்பனியின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். அவர்கள் மீளமைக்கப்பட்ட கிளிநொச்சி முதல் பளைவரையான தடத்தில் புகையிரதப் பயணமொன்றை மேற்கொண்டனர்.

2. இருபத்தேழரை கிலோமீட்டர் நீளமான கிளிநொச்சி முதல் பளை வரையான தடமானது இந்திய அரசால் இலங்கை அரசுக்கு வடக்கு புகையிரதத்தடத்தை மீளமைக்கும் நோக்கில் சலுகைக் கடனடிப்படையில் வழங்கப்பட்ட 800 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சலுகைக்கடன் மூலம் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கான உறுதியுரையானது இலங்கை ஜனாதிபதியின் இந்திய விஜயத்தைத் தொடர்ந்து இந்திய இலங்கை அரசுகள் 9 ஜுன் 2010 இல் புதுடெல்லியில் வெளியிட்ட கூட்டுப்பிரகடனத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே நிறைவுசெய்யப்பட்டு 14 மார்ச் 2013 இல் திறந்து வைக்கப்பட்ட பகுதிகளாக மதவாச்சி-மடு தடமும் 14 செப்ரெம்பர் 2013 இல் இலங்கை ஜனாதிபதியால் திறந்துவைக்கப்பட்ட ஓமந்தை கிளிநொச்சி தடமும் உள்ளடங்குகின்றன.

3. கௌரவ குமார வெல்கம, போக்குவரத்து அமைச்சர் அவர்கள் வைபவத்தில் உரையாற்றும்போது வடக்கு புகையிரத மீளமைப்பு உட்பட்ட பல்வேறு மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்கு இந்திய அரசு செய்துவரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்தார். இரு நாடுகளினதும் உறவுகளை வலியுறுத்திப்

பேசுகையில் இத்திட்டத்துக்கு ஏனையவர்கள் வழங்காத உதவிகளை இந்திய அரசு மென்போக்கில் பல சலுகைக்கடன்களாக வழங்கிவருகிறது எனத் தெரிவித்தார். இந்திய ரயில்வே கட்டுமான கம்பனியின் வேலைகளையிட்டு அவர் திருப்தி வெளியிட்டதுடன் தலைமன்னாரும் காங்கேசந்துறையும் கூட புகையிரத்தடத்தால் விரைவில் இணைக்கப்படும் எனத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இன்னும் இரு வருட காலத்தில் மாத்தறை-கதிர்காமம் தடமானது முடிக்கப்படும் என்றார். இலங்கையில் புகையிரதத் தடங்களின் அபிவிருத்திக்கு மேலும் பல சலுகைக் கடன்களை இந்தியா வழங்குவது பற்றி கருத்திற் கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தினார்.

4. இந்தியத் தூதுவர் மேன்மை தங்கிய வை.கே.சின்ஹா அவர்கள் தனது உரையில் கிளிநொச்சி-பளை தடமானது இந்தியா இலங்கை இடையிலான வரலாறு மொழி, கலாச்சாரம், சமயம் மற்றும் வர்த்தகம் எனும் அடிப்படையிலான உறவில் ஒரு மைல்கல் எனத்தெரிவித்தார். வடக்கின் புகையிரதத் தடத்தின் மீளமைப்பானது வாழ்க்கைநிலை வழமைக்குத் திரும்பல், வாழ்வாதார உருவாக்கம் மற்றும் அதற்கு ஆதரவளித்தல், தொடர்புறு வழிகளை வழமைக்குக் கொண்டுவருதல், என்பவற்றுக்கு வடமாகாணத்தினுள்ளே உதவல் மட்டுமன்றி நாட்டின் ஏனைய பகுதிகளுடன் அவை ஏற்பட உதவும் எனத்தெரிவித்ததுடன் இவை மூலம் அபிவிருத்தி, நல்லிணக்கம், மேம்பட்ட ஒருங்கிணைப்பு என்பவை மேம்பட உதவும் என்றார். தூதுவர் அவர்கள் இந்திய ரயில்வே கட்டுமான கம்பனியை வடக்கு புகையிரதத் தடத்தை குறித்த காலத்தில் கட்டியமைத்தமைக்காகப் பாராட்டு தெரிவித்ததுடன் கட்டுமானப் பணிகள் திட்டமிட்டபடி முன்னேறுவதாகவும் தெரிவித்தார்.

5. 800 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான வடக்கு புகையிரதத் தட கட்டுமானக் கடனின் முக்கிய கூறாக அமைவது இலங்கையின் புகையிரதத் திணைக்களத்தால் கொள்வனவு செய்யப்பட்ட புகைவண்டிகள் ஆகும். இவை இலங்கையின் புகைவண்டிகளுக்கான தேவைகளை பெருமளவு பூர்த்திசெய்யும். கதிர்காமம் வரையான புகையிரதத் தடக் கட்டுமானத்துடனும் தலைமன்னார் இராமேஸ்வரம் படகுசேவையின் மீள் ஆரம்பத்துடனும் இலங்கையர்கள் விரைவில் அம்பாந்தோட்டை மற்றும் மாத்தறையிலிருந்து புகையிரதம் மூலம் புத்தகாயாவுக்கும் அதேபோல் வட இந்தியாவிலுள்ள ஜம்மு காஷ்மீருக்கும், மேற்கே குஜராத்துக்கும், கிழக்கில் அஸாம் மற்றும் வடகிழக்கு மாநிலங்களுக்கும் பயணிக்க முடியும் எனத் தெரிவித்தார். இது தொடர்பில் இலங்கைக்கு இந்திய அரசு தனது முழு ஒத்துழைப்பையும் வழங்கும்.

6. முரண்பாடுகளால் பாதிப்படைந்த இலங்கையின் பிராந்தியங்களிடையே புகையிரத வலையமைப்பை முழுமையாக மீளமைப்பதற்கு இலங்கை புகையிரதத் திணைக்களம் எடுக்கும் மேலும் ஒரு முயற்சியை பாராட்டுகையில் இம்முயற்சி இலங்கைத்தீவின் பல பாகங்களின் மக்களை ஒருவரோடொருவர் நெருங்கி வரவைக்கும் எனத்தெரிவித்தார். இலங்கையின் மிகக்கிட்டிய அயலவராகவும் நீண்டகால பங்காளியாகவுமுள்ள இந்தியாவானது இலங்கை தனது அபிலாசைகளான சமாதானம் அமைதி தேசிய நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி என்பவற்றை பூர்த்திசெய்ய தனது முழு ஆதரவையும் வழங்கத்தயாராகவுள்ளது என்பதை வலியுறுத்தி தனது உரையை நிறைவு செய்தார்.

…

யாழ்ப்பாணம்
05 மார்ச் 2014